1981 மே 6]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி கதர்—துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதித்தத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

5. கவன ஈர்ப்புகள்.

அ. விளவன்கோடு வட்டம் காந்திமதி ரப்பர் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினை.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டம்—காந்திமதி ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் 100 பேருக்கு வேலை மறுக்கப்பட்டது குறித்து'' மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்ட தோட்டத் தொழிலாளர் சங்கம் குமரி மாவட்டத்திலுள்ள காந்திமதி ரப்பர் தோட்ட நிர்வாகத்தின் மீது, திரு. குருஸ்முத்து என்ற தொழிலாளியை 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22 ஆம் நாள் அன்று நிர்வாகம் வேலை நீக்கம் செய்ததாகவும், தொழிலாளியை மீண்டும் வேலைக்கு எடுக்க வேண்டும் என்றும் கோரி ஒரு தொழிற் தகராறை நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் முன்பு எழுப்பியது. மேலும் இப்பிரச்சினை பற்றி நிர்வாகத்தினரிடத்தில் நேரில் எடுத்துச் சொல்லியதில் பலனில்லை என்றும், 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16 ஆம் நாள் முதல் வழக்கம்போல் தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றபோது, கேட் (Gate) மூடப்பட்டிருந்ததின் காரணமாக தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல இயலவில்லை என்றும் கூறி, அதனால் இதை விசாரிக்க வேண்டும் என்று சங்கம் கோரியது.

திரு. குருஸ்முத்து என்ற தொழிலாளி 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாள் அன்று தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவர் மீதான குற்றச்சாட்டுகள் மீது 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் நாள் அன்று விசாரணை நடைபெற இருந்தது என்றும், அத்தொழிலாளிக்கு மீண்டும் வேலை கொடுக்குமாறு கோரி மற்ற தொழிலாளர்கள் வேலைக்கு வரவில்லை என்றும் நிர்வாகத்தின் தரப்பில் கூறப்பட்டது. மேலும் தொழிலாளர்கள் வேலைக்கு வந்தால், அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்றும் நிர்வாகத்தின் தரப்பில் கூறப்பட்டது.

[திரு. எஸ். இராகவனாந்தம்] [1981 மே 6

இத்தொழில் தகராறு, நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலரால் 2—4—1981, மற்றும் 22—4—1981 ஆகிய தேதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நிர்வாகத்தினர் ஆஜராகவில்லை. மீண்டும் 7—5—1981 அன்று விசாரணை நடைபெற உள்ளது.

*திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் இந்த காந்திமதி ரப்பர் தோட்டத்தில் சுமார் 100 தொழிலாளர்கள், 27 பால் வெட்டும் தொழிலாளர்கள், சுமார் 40 காட்டு வேலை தொழிலாளர்கள், இதர தொழிலாளர்கள் சேர்த்து சுமார் 100 பேர்கள் இருக்கிறார்கள். நீண்ட நெடுங் காலமாக அந்த மாவட்டத்திலே இருக்கிற நூற்றுக்கும் மேற்பட்ட தோட்டங்களிலே 'பிளாண்டேஷன் லேபர் ஆக்ட்' அமலாக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த காந்திமதி நிர்வாகம் மட்டும் அரசாங்கத்திலே இயற்றியிருக்கிற ஒரு சட்டத்தை சுமார் 20 ஆண்டு காலமாக மறுத்து, பல்வேறு தகராறுகளை செய்து வருகிறார்கள். நியாயமான சம்பளம் வேண்டும் என்று கேட்கின்ற காரணத்தால் அவர்களுக்கு வேலை மறுக்கப்படுகிறது. அரசாங்கத்தின் லேபர் இலாக்கா கூட அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தாலும் அவர்கள் வருவதில்லை. கடந்த மூன்று மாதங்களாக இந்தநிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நியாயமான கோரிக்கைகளை, அரசாங்கம் இயற்றியிருக்கிற சட்டத்தை அமலாக்க வேண்டும், பிளாண்டேஷன் லேபர் ஆக்ட் அமலாக்க வேண்டும், நியாயமான கோரிக்கையை கேட்டதன் காரணமாக வேலை மறுக்கப்படுகிறது. வேலை மறுக்கப்பட்ட தொழிலாளர்கள் சத்தியாகிரகம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அதன் காரணமாக அங்கே இருக்கிற போலீஸ்காரர்கள் அங்கே இருக்கிற தொழிலாளர்கள் மீது அநாவசியமான பொய்யான பல வழக்குகளை ஜோடித்துள்ளார்கள். குறிப்பாக ஒன்பது, பத்து வழக்குகளை ஜோடித்துள்ளார்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாக கேட்டு சீக்கிரமாக முடியுங்கள்.

திரு. டி. மணி : துணைத் தலைவர் அவர்களே, நியாயமான, சட்டப்படியான சம்பளத்தை அங்கே அமலாக்க அரசு முன் வருமா? அந்த நியாயமான போராட்டத்திலே தொழிலாளர்கள் மீது எடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும். இன்று அங்கு ஒரு பெரிய போலீஸ் முகாமாக, போலீஸ் அதிகாரிகள் அங்கே முகாம் அமைத்துக் கொண்டு, வேறு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகிற வேலை நடத்தி வருகிறார்கள். இதை தடுத்து நிறுத்தி பழைய தொழிலாளர்களை வேலைக்கு திரும்பவும் எடுக்க வேலை வாய்ப்பு கொடுக்க, சட்டப்படி நியாயமான சம்பளத்தை அமலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 மே 6]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவரவர்களே, முதலாளிகள் பேச்சு வார்த்தைக்கு வர வில்லை என்ற விஷயத்தினை நானே எடுத்துச் சொன்னேன். இப்படி முதலாளிகளை ரெமாட்டேன் என்று சொல்வதால் தான் நேற்றையதினம் ஒரு சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றி விட்டால் இவர்கள் வர வில்லை என்றால் சம்மன் அனுப்பலாம். அதுவரையில் அந்த செயலில் நாம் ஈடுபட முடியாது. எனவே 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாள் அன்று மீண்டும் அழைத்திருக்கிறோம். தொடர்ந்து அழைத்து பேசுவதற்கு முயற்சி செய்வோம். அதிலே சுமூகமான ஏற்பாடு செய்வதற்கு இந்த இலாக்கா எல்லா ஏற் பாட்டையும் செய்யும்.

திரு. டி. மணி : துணைத் தலைவரவர்களே, சட்டப்படி யான சம்பளத்தை, உரிமைகளை தர மறுக்கிற அந்த தோட் டத்தை அரசாங்கமே எடுத்து நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி வேறு கேள்வி போட் டால், பரிசீலனை செய்து பார்த்து, பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதே கவன ஈர்ப்புத் தீர்மானத்தை, திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், நா. பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம் ஆகியவர்களும் கொடுத்துள்ளனர்.

ஆ. திருவண்ணாமலையில் ஏற்பட்ட சாலை விபத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :
திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், இரா. தாமரைக்கனி, எஸ். என். இராமசாமி, என். ஏ. பூங்காவனம், இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, செ. சிவசாமி, தி. கா. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா, ப. தீர்த்தராமன், ஆகியோர் " திருவண்ணாமலையில் அரசு போக்குவரத்துப் பேருந்தும் கார் ஒன்றும் மோதிக்கொண்டதால் மூவர் உயிரிழந்தது குறித்து " கவன ஈர்ப்புத்தீர்மானங்களை கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குகொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திரு வண்ணாமலையில் அரசு போக்குவரத்துப் பேருந்தும், கார் ஒன்றும் மோதிக்கொண்டதால் மூவர் உயிரிழந்தது குறித்து,